*2017 ஜூலை 14]*

*அனுப்பிவிடுகிறார்கள். இப்பிரச்சினைக்கு தயவுசெய்து ஆவன செய்யுமாறு மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களைக் கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**210—**

**பள்ளியைத் தரம் உயர்த்துதல்**

***13828—திரு. கே.எஸ். விஜியகுமார்:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தேர்வாயிலுள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*அம்மா ஓர் அதிசயப் பிறவி, அம்மாவின் பார்வை பட்டால் புல் கூட பூவாகின்றது. தகரம் கூட தங்கமாகிறது. மண்கூட பொன்னாகின்றது. என்னைப்போன்ற சாமானியர்கள்கூட சர்க்கார் மந்திரி ஆனார்கள். பனித் துளியைவிட பரிசுத்தமான தாயின் பாதத்தை வணங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்கி எனது பதிலை வழங்குகிறேன்.*

*திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, தேர்வாயிலுள்ள அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்த ஆண்டு தரம் உயர்த்துவதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள பள்ளிகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு நல்ல பதில் வர வாய்ப்புள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*[2017 ஜூலை 14*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார் அவர்கள்.*

*முற்பகல் 11–10*

**திரு. கே.எஸ். விஜியகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"வாழ்ந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்.*
*இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்."*

*"வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி,*
*மக்களின் மனதில் நின்றவர் யார்?"*

*அது எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாலிக்கு தங்கம் தந்த தங்கத் தாயே! ஏழைகள் பசியாற 'அம்மா உணவகம்' கொண்டுவந்த அன்னபூரணியே! நோய், நொடி இல்லாமல் வாழ 'அம்மா உடல் பரிசோதனைத் திட்டத்தைக்' கொண்டுவந்த தமிழகத்தின் தன்வந்திரியே! தமிழகத்தில் கல்விப் புரட்சி செய்த சரஸ்வதி தாயே! டெல்டா விவசாய மக்களுக்கு காவேரி நீரை பெற்றுத் தந்த காவேரி தாயே! இதுபோல் இனி யாரைச் சொல்வோம் தாயே. (மேசையைத் தட்டும் ஒலி) இம்மண்ணுலகை விட்டுச் சென்றாலும், விண்ணுலகத்தில் நீங்கள் இருந்தாலும், தங்களின் நினைவோடு என்றும் வாழும் என்னைப் போன்ற சாதாரண தொண்டனையும், 3 முறை இந்த மாமன்றத்தில் அமர வைத்து அழகுபார்த்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நானும், என் குடும்பத்தாரும் தினந்தோறும் வணங்குகிறோம். அவர் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். நூற்றாண்டு நாயகன், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை கொண்டாட உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி வட்டத்தில், ஆதி திராவிடர் நலத் துறை சார்பாக இயங்கிக்கொண்டிருக்கும் ஆதி திராவிடர் நலப் பள்ளியில் சுமார் 295 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். இதில் நடுநிலைப் பள்ளியில் 110 மாணவ, மாணவியர்களும், உயர்நிலைப் பள்ளியில் 185 மாணவ, மாணவிகளும் படிக்கின்றனர். இந்தப் பள்ளி 1999 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு,*

*2017 ஜூலை 14]*

*சுமார் 18 ஆண்டுகளாக இயங்கிக்கொண்டிருக்கிறது. கடந்த 3 ஆண்டுகளாக இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை அந்தப் பகுதி மக்களும், அந்தப் பள்ளியின் பெற்றோர்–ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்த நிருவாகிகளும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொண்டு சென்றிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக ஒரு நல்ல பதில் வரும் என்று கூறியிருக்கிறார்கள். அந்தப் பதில், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாக அமைய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், தேர்வாயிலுள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் இக்கல்வியாண்டில், 160 மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர்.இப்பகுதியில் வசித்துவரும் மொத்த மக்கள்தொகையின் எண்ணிக்கை சுமார் 7 ஆயிரம் ஆகும். இவர்களில் 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மக்களாவர். தேர்வாய், ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியிலிருந்து 22 கி.மீ. தொலைவில் ஊத்துக்கோட்டையில் அரசு மேல்நிலைப் பள்ளியும், 7 கி.மீ. தொலைவில் வேலம்கண்டிகையில் அரசு மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகிறது. மேலும், தேர்வாய் உயர்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான 12 ஏக்கர் நிலமும் கட்டட வசதியும் உள்ளது. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை குறித்து உரிய வகையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான அனுமதியோடு, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை மிக விரைவில் நிறைவேற்றப்பட வாய்ப்புள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள்.*

**திரு. கே.எஸ். விஜியகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளி, 1999 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. இந்தப் பள்ளியுடன் தமிழகத்தில் அன்றைக்கு 6 பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. தேர்வாயில் இருக்கின்ற ஆதி திராவிடர் நலத் துறையைச் சார்ந்த இப்பள்ளி மட்டும்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படவில்லை. மற்ற 5 பள்ளிகளும் அரசு மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுவிட்டன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, வரும் கல்வியாண்டில் இந்தப் பள்ளியையும் அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தவும், அந்தப் பள்ளிக்குத் தேவையான கட்டடத்தைக் கட்டித் தரவும் பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் ஆதி திராவிட மக்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு, ஆதி திராவிடர் நலத் துறை சார்பாக சமுதாயக் கூடம் ஒன்று கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை இந்த ஆண்டே நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொரு கோரிக்கையாக சமுதாயக் கூடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நிதி ஆதாரத்தைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடன் கலந்தாலோசித்து, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.